

# எது சத்தியம்?

மில்லினிய வேதாகம சத்திய இயக்கம்

# எது சத்தியம்?

***1.*** *யெஷுஆ வாக்குறுதியளிக்கிறார்: "நீதியின் மேல் (எது சரியானதும், நன்மையானதும், உண்மையானதுமாயிருக்கிறதோ அதின் மேல்) பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் (மற்ற எவரும் அல்ல) திருப்தியடைவார்கள்" (மத்.5:6); "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத்திறக்கப்படும்", (மத். 7:7,8) "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் (பாவம், தப்பறை, அறியாமை, மூடநம்பிக்கை, முரண்பாடான மற்றும் குழப்பமான மனித கற்பனைகள், கொள்கைகள், மதகோட்பாடுகள் – இவைகள் எல்லாவற்றிலிருந்தும் விடுதலையாக்கும்)". லூக்11:9,10; யோவான். 8:32.*

### நாம் எங்கேயிருந்து சத்தியத்தை கண்டடையலாம்?

***2.*** *மனிதனுக்கு வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தை புரிந்து கொள்ளும் திறனைக் கொடுத்த விவேகமுள்ள சிருஷ்டிகர் ஒருவர் இருக்கிறார். பரத்திலிருந்து வருகிற "சுத்தமுள்ள ஞானமாகிய" சத்தியத்தை கண்டடைவதற்கு நாம், "யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய" "ஜோதிகளின் பிதாவாகிய" தேவனிடத்தில் தேட வேண்டும் (யாக்.1:5,17;3:17). "உலகமனைத்தையும் மோசம்போக்குகிற (இருப்பினும் இன்னும் அதிகமதிகமாய், வெளிப்படையாகவும் கூட தொழுது கொள்ளப்படுகிறவனுமாகிய) பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம்", "கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச்சுற்றித்திரிகிறான்", "இப்பிரபஞ்சத்தின்*

*தேவனானவன்", அவன் "ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வான்", "அவிசுவாசிகளின் (தேவ வார்த்தையை விசுவாசியாதவர்களின்) மனதைக்குருடாக்கினான்", "அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்தில் இல்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப்பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப்பேசுகிறான்" (வெளி.12:8; 1பேதுரு5:8; 2கொரி.4:4; 11:14; யோவா.8:44;14:30;16:11). ஆகவே பொய்க்குப்பிதாவை நம்பக்கூடாது.*

***3.**ஆகையால் தெய்வீகசத்தியத்தை தேடுகிற எவரும், சாத்தானால் உந்தப்பட்ட மனித கற்பனைகளையும், கோட்பாடுகளையும், பாரம்பரியங்களையும், அவைகள் எவ்வளவு பிரபலமாய் இருந்தாலும், அவைகளை நாடி செல்லக்கூடாது. அதுவே சத்தியம் என்று அவர்கள் கோரினாலும், அது சத்தியமல்ல. மாறாக நாம் வேதாகமத்தை நாட வேண்டும் (வேதாகமமே தேவனுடைய வார்த்தையாகவும், சத்தியமாகவும் இருக்கிறதென்று வேதத்திலுள்ள அநேக சான்றுகளும், வேதத்திற்கு வெளியேயுள்ள மற்றசான்றுகளும் நிரூபிக்கின்றன). வேதாகமத்தைக்குறித்து யெஷுஆ இவ்வாறு கூறியிருக்கிறார், "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" (யோவான்17:17; 6:63).*

***4.**பரிசுத்த வேதாகம எழுத்துக்கள், நம்மை "கிறிஸ்து யெஷுஆவைப் பற்றும் விசுவாசத்தினாலே இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக ஆக்குகின்றன"; ஏனெனில் வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்*

*செய்ய தகுதியுள்ளவனாகவும்* இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துக்கொள்ளுதலுக்கும், சீர்திருத்துதலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளா-யிருக்கிறது" (2தீமோ. 3:15-17).

**5.** வேதாகமத்திலிருந்து சத்தியத்தை பெற்றுக்கொள்வதற்கு, ஒருவனுக்கு நேர்மை, மனத்தாழ்மை, சாந்தகுணம் அவசியமா-யிருக்கின்றன. அதுமட்டுமல்ல, அவன் முன்பு வைத்திருந்த தப்பெண்ணங்களை புறக்கணிக்க விருப்பமுள்ளவனாயும் இருக்க வேண்டும்.

### ஜோதிகளின் பிதாவுக்கு எதிராக பொய்க்குப்பிதா

**6.** *ஜோதிகளின் பிதா* ஆதாமிடம் இவ்வாறு கூறினார்: "அதை நீ புசிக்கும் நாளில் [கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம்போல (2பேதுரு3:8; சங்.90:4) – ஆதாம் மரிக்கும்போது அவனுடைய வயது 930] சாகவே சாவாய் (KJV பக்ககுறிப்பில் - dying thou shalt die - 'செத்துக்கொண்டேசாவாய்' என்று இருக்கிறது)" ஆதி.2:17.

மாறாக பொய்க்குப்பிதா ஏவாளிடம் "நீங்கள் சாகவே சாவ-தில்லை" என்று அவன் முதலில் சொன்ன மிகப்பெரிய பொய்யின் மூலம் அவன் தேவனை வெளிப்படையாக எதிர்த்தான் [ஆதி.3:4].

7. *ஜோதிகளின் பிதா* ஆதாமை தண்டிக்கையில், அவன் மரிக்கும்போது "நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்கு *திரும்பு* ... நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத்*திரும்பு*வாய்" என்று சொன்னார் (ஆதி.3:19).

மாறாக பொய்க்குப்பிதா ஆதாம் மரிக்கையில் அவன் மண்ணா-யிருந்த நிலைக்கு "*திரும்பவில்லை*" என்றும், மாறாக அவன் இன்னும் உயிருடன், ஒரு முற்றிலும் புதிய நிலைக்கு போனான் என்று கோருகிறான்.

**8.** *ஜோதிகளின் பிதா* தாம் கொடுத்த மரண தண்டனையை

*மனுகுலத்தில் எல்லோர் மேலும் செயல்படுத்தினார், சரித்திரமும் இதற்கு சான்று அளிக்கிறது.*

*மாறாக பொய்க்குப்பிதா ஏவாளும், ஆதாமும், அவனுடைய சந்ததியும் வாழ்ந்து கொண்டேயிருந்து, "தேவர்களைப் போல் (தூதர்களைப் போல்) இருப்பார்கள்" என்று நம்பும்படி ஏவாளை "வஞ்சித்தான்" (ஆதி.3:5; 1தீமோ.2:14).*

***9.**<u>ஜோதிகளின் பிதா</u> தெளிவாக இந்த சத்தியத்தைக்கொடுத்து, அந்த சத்தியத்தின் வெளிச்சத்தில் அப்போஸ்தலனாகிய பவுலின் மூலம் கிறிஸ்தவர்களுக்கு இவ்வாறு சொன்னார்: "சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது போல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்" (2கொரி.11:3).*

*ஆனால் இதற்கு மாறாக ஒருபோதும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாததினால், "மானிட சிருஷ்டியாகவே" இருந்த ஆதாம், ஏதோ ஒருவிதத்தில் ஆவிக்குரிய மரணத்தை அடைந்தான் என்றும், அவனும் அவனுடைய சந்ததியார் அனைவரும் மரித்த பின்பும் வாழ்கிறார்கள் என்றும் (பரலோகத்திலோ, நித்திய வேதனையிலோ அல்லது உணர்வுள்ள ஏதோஒரு இடைப்பட்ட நிலையிலோ வாழ்கிறார்கள் என்றும்), ஆகையால் உயிர்த்தெழும் நாள்வரை காத்திருக்க தேவையில்லை என்றும் நம்பும்படி, பொய்க்குப்பிதா அநேகரை வஞ்சிக்கிறான்.*

***10.**<u>ஜோதிகளின் பிதா</u> இவ்வாறு கூறுகிறார்: "மனுபுத்திரருக்கு சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கும்; அவர்களுக்கும் இவைகளுக்கும் ஏக சம்பவமுண்டு; இவைகள் சாகிறது போலவே அவர்களும் சாகிறார்கள்; ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே; மிருகத்தைப் பார்க்கிலும் மனுஷன் மேன்மையுள்ளவன் அல்ல... எல்லாம் ஒரே இடத்திற்குப்போகிறது (பரலோகத்திற்கும் அல்ல,*

*நித்திய வேதனைக்கும் அல்ல); எல்லாம் மண்ணிலே உண்டா-கிறது, எல்லாம் மண்ணுக்குத்திரும்புகிறது (பிர.3:19,20; சங்.49:14). ஆனால் இதற்கு மாறாக மரணத்திற்குப்பிறகு மனிதர்களில் பெரும்பான்மையோர் மிருகங்களைக்காட்டிலும் மோசமான நிலையில் இருக்கிறார்கள் என்று பொய்க்குப்பிதா கூறுகிறான். அதாவது ஒரு மிருகம் மரிக்கும்போது அதனுடைய ஜீவன் முடிவுக்கு வருவதினால், பாடுகளிலிருந்து விடுவிக்கப்படுகிறது, மனுகுலமோ மரிக்கும்போது, உண்மையாக மரிக்காமல், ஜீவித்துக் கொண்டேயிருக்கிறது என்றும், அவர்களில் ஏறக்குறைய எல்லோரும் நித்திய வேதனையிலிருக்கிறார்கள் என்றும் பொய்க்குப்பிதா கூறுகிறான்.*

***11.*** *"மனிதன் ஜீவாத்துமாவானான் (எபிரெய மொழியில் நெஃபேஷ் (nephesh), உணர்வுள்ள ஜீவி)" என்றும் "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்" என்றும் "ஒருவனும் தன் ஆத்துமா அழியாதபடி அதைகாக்கக்கூடாதே" என்றும் ஜோதிகளின்பிதா சொல்கிறார் (ஆதி.2:7; எசே.18:4,20; சங்.22:29;30:3;78:50).*

*இதற்குமாறாக, மனித ஆத்துமா ஒரு உணர்வுள்ள ஜீவியோ, அல்லது நபரோ இல்லை என்றும், ஆத்துமா என்பது மனிதனுக்குள்ளிருக்கிற ஒரு நுட்பமான, பிரிக்க முடியாத, காண முடியாத காரியமென்றும், அது நித்தியத்திற்குமிருப்பது அவசியமென்றும் பொய்க்குப்பிதா போதிக்கிறான்.*

***12.*** *ஜோதிகளின் பிதா இவ்வாறு சொல்கிறார்: "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய யெஷுஆ கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" (மரணத்திற்கு எதிர்மாறானது ஜீவன்) [ரோமர் 6:23].*

*மாறாக பொய்க்குப்பிதா இதற்கு மிகவும் எதிரான காரியத்தை போதிக்கிறான். பாவத்தின் சம்பளம் மரணமில்லையென்றும்,*

*மாறாக நித்திய வேதனையில் ஜீவிப்பதே என்றும் போதிக்கிறான். துன்மார்க்கர் கிறிஸ்துவின் மூலம் தேவனுடைய கிருபைவரமாக நித்திய ஜீவனைப்பெறுவது இல்லை என்றும், தேவனாலேயே அழிக்க முடியாத, ஒரு சாகமுடியாத ஆத்துமா அவர்களுக்குள் இருப்பதினால் வேறுவழி இல்லாமல் அவர்கள் நித்தியத்திற்கும் ஜீவிக்கிறார்கள் என்றும் கூறுகிறான். இவ்வாறு செய்வதினால், தேவன் "ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்தில் [இங்கே உபயோகிக்கப்பட்ட கிரேக்க வார்த்தை "கெஹென்னா" (gehenna) ஹேடஸ் (hades) அல்ல. கெஹென்னா என்பது இரண்டாம் மரணத்தை, அதாவது பூரணமான, முழுமையான, நித்திய அழிவைக்குறிக்கிறது] அழிக்க வல்லவராய் இருக்கிறார்" என்று யெஷுஆ சொன்ன காரியத்தையும் கூட மறுதலிக்கிறான் [மத். 10:28].*

***13.*** *"மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்", "அவன் பிள்ளைகள் கனமடைந்தாலும் அவன் உணரான்; அவர்கள் சிறுமைப்பட்டாலும் அவர்களைக்கவனியான்"; "அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத்திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்"; "மரணத்தில் உம்மை நினைவு கூர்வதில்லை, பாதாளத்தில் உம்மைத்துதிப்பவர் யார்?" (பிர.9:5,10; யோபு 14:21; சங்.146:4;6:5;115:17) என்று ஜோதிகளின் பிதா கூறுகிறார்.*

*பொய்க்குப்பிதா இதற்கு எதிர்மாறான காரியத்தையே போதிக்கிறான். மேலும் பல நேரங்களில் திறமையுள்ள போதகர்கள் மற்றும் ஓவியர்களின் மூலம் மரித்த பெற்றோர்கள் ஆவி உலகத்தில் இன்னும் ஜீவித்துக்கொண்டு, பூமியிலுள்ள தங்களுடைய சிறு பிள்ளைகளை வழிநடத்திக்கொண்டிருப்பதாக வர்ணிக்கிறான்.*

***14.*** *யெஷுஆ "ஒருவராய் (தேவனைத்தவிர) சாவாமையுள்ளவராய்*

இருக்கிறார்" (1தீமோ.6:16) என்று <u>ஜோதிகளின் பிதா</u> குறிப்பிடுகிறார். மேலும் சபை "மகிமையையும் கனத்தையும், சாவாமையையும் தேட வேண்டும்" என்றும், அதை அவர் அவர்களுக்கு முதலாம் உயிர்த்தெழுதலில் (அதற்கு முன்பு அல்ல) "அளிப்பார்" என்றும் அவர் சபைக்கு அறிவுறுத்துகிறார். இந்த முதலாம் உயிர்த்தெழுதல் "தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாளிலே", சுவிசேஷ யுகத்தின் முடிவில் நிகழும் மகா உபத்திரவக்காலத்திலே நடக்கும். அப்பொழுது அவர்கள் கிறிஸ்துவின் மணவாட்டியாக "அவர் இருக்கிற வண்ணமாகவே" "சாவாமையை தரித்துக்கொள்வார்கள்" (ரோமர். 2:5-7; வெளி. 20:6; தானி. 12:1-3; 1யோவா. 3:2; 1கொரி. 15:53,54).

இதற்குமாறாக பொய்க்குப்பிதா மனித ஆத்துமா இயல்பாகவே சாவாமையுடையது என்றும், நீங்கள் பிறப்பிலிருந்தே இயற்கையாக பெற்றிருக்கிற அந்தகாரியத்தை நாடுவதோ, அதை தரித்துக்கொள்வதோ மூடத்தனம் என்றும் கூறுகிறான்.

**15.**<u>ஜோதிகளின்பிதா</u> இவ்வாறு கூறுகிறார்: யெஷுஆ "மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறானவர்" (கொலோ. 1:18; வெளி.1:5). அவருடைய வார்த்தையின் மூலம் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு (யோவா.3:5; 1கொரி.4:15; யாக்.1:18; 1பேதுரு1:3,23,25), பிறகு யெஷுஆவைப்போலவே மரித்தோரிலிருந்து ஆவியினால் பிறந்தவர்கள் அல்லது உயிர்த்தெழுந்தவர்கள் மட்டுமே தேவனுடைய ராஜ்யத்தின் பரத்துக்குரியதான, ஆவிக்குரியதான மற்றும் காணக்கூடாததுமான நிலைக்குள் பிரவேசிக்க முடியும். ஆகையால் யெஷுஆவின் முதல் வருகைக்கு முன்பு "பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை" (யோவான் 3:13). பெந்தெகொஸ்தே காலத்தில் தாவீது "பரலோகத்திற்கு எழுந்து போகவில்லை"

*(அப்.2:29-34). அப்போஸ்தலர்களும் கூட தங்களுடைய பரலோக வெகுமதியாகிய சாவாமையினால் முடி சூட்டப்படுவதற்கு யெஷுஆ இரண்டாம் வருகைவரை காத்துக்கொண்டிருக்க வேண்டும் (வெளி.2:10; 1கொரி.15:48-54; கொலோ.3:4; 1தெச.4:13-17; 2தீமோ.4:8; 1பேதுரு.1:4,5,13;5:4; யோவா. 14:2,3; 1யோவா.3:2). யெஷுஆவின் இரண்டாம் வருகையில் "நீதிமான்களின் உயிர்த்தெழுதலின்" காலத்தில், அதாவது ஆயிரவருட நியாயத்-தீர்ப்பு நாளில் (அப்.17:31; 2பேது. 3:7,8) கிறிஸ்து பூர்வகால தீர்க்கதரிசிகள் உட்பட தம்முடைய ஜனங்கள் அனைவருக்கும் வெகுமதியளிப்பார் (மத்.16:27; லூக்.14:14; வெளி.11:18; 20:12; 22:12). இதற்குமாறாக பொய்க்குப்பிதா இவ்வாறாக போதிக்கிறான்: ஒருவனும் காத்திருக்க தேவையில்லை. அவர்கள் மரிக்கும்போதே நியாயந்தீர்க்கப்பட்டு, நித்திய ஜீவனை பரலோகத்திலோ அல்லது அக்கினிமயமான நரகத்தின் நித்திய வேதனையிலோ பெற்றுக் கொள்வார்கள். நரகத்தைப் பற்றிய இந்த தவறான சமய கோட்பாடு, புற சமயத்தினர்களிடமிருந்து பல கிறிஸ்தவ மதப்பிரிவுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.*

***16.** <u>ஜோதிகளின்பிதா</u> இவ்வாறு கூறுகிறார்: உயிர்த்தெழுதலைக் கருத்தில் கொள்ளும்போது, ஆதாமுக்குள் மரிக்கிறவர்கள் நிர்மூலமாவதில்லை. "ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனை-வரும் அவருடைய சத்தத்தைக்கேட்குங்காலம்வரும்... (அவர்கள்) எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவா.5:28,29); ஏனெனில் கிறிஸ்து "எல்லோரையும் மீட்கும் பொருளாகத்தம்மை ஒப்புக்கொடுத்தார், இதற்குரிய சாட்சி ஏற்றக்காலங்களில் விளங்கவிருக்கிறது" (1தீமோ.2:4-6). ஆகையால் தேவன் "எல்லா மனுஷரும் ரட்சிக்கப்படவும் (ஆதாமின் தண்டனை மற்றும் மரணத்திலிருந்து ரட்சிக்கப்படவும்) சத்தியத்தை அறிகிற அறிவை*

அடையவும்'', அதற்குபிறகு நித்திய ஜீவனை அடைவதற்கான ஒரு முழுமையான பூரணமான சந்தர்ப்பம் எல்லோருக்கும் அவருடைய ஈவாக கொடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார் (இந்த சந்தர்ப்பம் இதுவரை சிலருக்கு மட்டுமே கிடைத்தது). ஆகையால் "நித்திரையடைந்தவர்களினிமித்தம்'', அதாவது மரணம் என்ற உணர்வற்ற நித்திரையில், "பூமியின்தூளில்'' இருக்கிறவர்களினிமித்தமும் நாம் "நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத்துக்கிப்பதில்லை'' (1தெச. 4:13-17); ஏனெனில் அவர்கள் "விழித்து எழுந்திருப்பார்கள்'' (தானி. 12:2), "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்'' (1கொரி.15:22).

இதற்குமாறாக பொய்க்குப்பிதா "நீங்கள் சாகவே சாவதில்லை'' – அதாவது நீங்கள் மரிப்பதுபோல தோன்றலாம், ஆனால் உங்களுடைய சரீரம் மட்டுமே மரண நித்திரைக்குள் செல்கிறது, நீங்களோ (உங்கள் ஆத்துமாவோ) மிகவும் விழிப்பாயிருந்து, முன்பைவிட அதிகமாக ஜீவித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றும், உங்களுடைய மாம்சசரீரம் (உங்களுக்கு அது தேவையில்லாதிருந்தாலும்) மறுபடியும் உங்களோடு சேர்க்கப்படுவதே உயிர்த்தெழுதல் என்றும் பொய்க்குப்பிதா போதிக்கிறான்.

*17.*<u>ஜோதிகளின்பிதா</u> இவ்வாறு வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் – மனுகுலம் அனுபவத்தின் மூலம் பாவத்தின் பயங்கரமான விளைவுகளைக்குறித்து கற்றுக்கொண்ட பிறகு, அவர் தம்முடைய ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமையை உபயோகித்து, சீர்திருத்த முடியாத கேடானவர்கள் அனைவரையும் அகற்றி பிரபஞ்சத்தை துப்புரவாக்குவார். "துன்மார்க்கர்யாவரையும் அழிப்பார்''; "அவர்கள் இராதவர்களைப்போல் இருப்பார்கள்'' (சங். 145:20; 37:10,20; ஒப.1:16); "அவர்கள் நித்திய ஆக்கினையை [கிரேக்க

*வார்த்தை கோலசின் (kolasin) அதின் அர்த்தம் நிர்மூலமாக்குவது (cutting off), நித்திய வேதனை அல்ல. அது ஜீவனிலிருந்து நித்தியத்திற்கு நிர்மூலமாக்கப்படுவதை, அதாவது நித்திய மரணத்தை அதாவது முழுமையான, பூரணமான நித்திய அழிவாகிய "இரண்டாம் மரணத்தை"க்குறிக்கிறது. ஏனெனில் "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23)] அடைவார்கள், ஆனால் (இதற்கு எதிர்மாறாக) நீதிமான்களோ நித்திய ஜீவனை அடைவார்கள்" (மத்.25:46).*

*இதற்குமாறாக பொய்க்குப்பிதா தேவனுடைய பரிசுத்த குணாம்சத்தின் இயல்புகளை மறுதலித்து, புறக்கணித்து தேவ-தூஷணம் செய்கிறான். அவன் அவரைப் பழிவாங்கும் இயல்புடையவராகவும், கொடியவராகவும், அவர் சிருஷ்டித்த கோடிக்கணக்கான மனிதர்களை நித்தியத்திற்கும் கொடுமையாக வாதிக்கிறவராகவும் சித்தரிக்கிறான், மேலும் சாத்தான் "ஷியோல்" (sheol) என்ற எபிரெய வார்த்தையையும் "ஹெடஸ்" (hades) மற்றும் "கெஹென்னா" (gehenna) என்ற கிரேக்க வார்த்தைகளையும் தவறாக மொழிப்பெயர்த்து, தவறாக பிரயோகித்து, அதற்கு தவறான அர்த்தத்தைக்கொடுத்தான். அதாவது மனுகுலத்தில் பெரும்பான்மையோர் வேதனை அனுபவிக்கும் ஒரு இடமாக இந்த வார்த்தைகளுக்கு பொய்யான அர்த்தத்தைக் கொடுக்கிறான்.*

***18.** ஜோதிகளின்பிதா அழிவை உருவகப்படுத்துவதற்கு அக்கினியை உபயோகிக்கிறார் - "சோதோம் கொமோரா பட்டணங்களும் [பட்டணத்தார்களும் என்பது சரியான மொழி பெயர்ப்பு அல்ல – ஆங்கில வேதாகமம் பார்க்க] [ அவைகள் முழுமையாக அழிக்கப்பட்டதில்] ... நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து, திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கின்றன" (யூதா.7). அந்த அக்கினி நித்தியத்திற்கும் எரிந்துக்கொண்டிருக்கும் ஒரு*

*அக்கினி அல்ல, மாறாக அந்த பட்டணங்களை நித்தியத்திற்கும் அழித்ததை அது அடையாளப்படுத்துகிறது. இதுபோலவே ஏசா. 66:24 மற்றும் மாற்கு 9:43-48ல் இருக்கிற பூச்சி மற்றும் நரகம் என்பவைகளும் அழிவை அடையாளப்படுத்துகிறது [மாற்கு9:43-48ல் நரகம் என்ற வார்த்தைக்கு உபயோகிக்கப்பட்ட கிரேக்க வார்த்தை "ஹேடஸ்" அல்ல. "ஹேடஸ்"ஆதாமினால் வந்த மரணத்தின் உணர்வற்ற நித்திரையைக் குறிக்கிறது. இங்கே உபயோகிக்கப்பட்ட கிரேக்க வார்த்தை "கெஹென்னா" அல்லது "இன்னோம்" பள்ளத்தாக்கு (the Valley of Hinnom)ஆகும். அது கழிவுகளை எரிக்கும் ஒரு இடமாயிருந்தது]. மேலும் வெளி. 20:14,15; 21:8-ல் "அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலும்" அழிவைக் குறிக்கிறது- "இது இரண்டாம் மரணம்" (ஏனெனில் அது இரண்டாம் மரணத்தைக் குறிக்கிறது, ஜீவனை அல்ல).*

*இதற்குமாறாக பொய்க்குப்பிதா, அவன் ஆதியில் சொன்ன பொய்க்கு வலுவூட்டுவதற்கு "அக்கினி" என்பது "அழிவை" [destruction] குறிக்காமல் "அழியாது நீடித்திருப்பதை" [preservation] குறிக்கிறது என்றும், "அக்கினிகடல்" இரண்டாம் மரணத்தைக் குறிக்காமல், அக்கினியினால் அழியாத பிசாசுகளினால் சொல்ல முடியாதளவிற்கு வாதிக்கப்பட்டுக்கொண்டிருந்து, நித்தியத்-திற்கும் நீடிக்கும் இரண்டாம் ஜீவனைக்குறிக்கிறது என்றும் போதிக்கிறான்.*

***19.*** *<u>ஜோதிகளின்பிதா</u> இவ்வாறாக அறிவிக்கிறார்: "நித்திய அக்கினி" (அழிவு) "பிசாசுகளுக்காகவும் அவன் தூதர்களுக்காவும் ஆயத்தம்-பண்ணப்பட்டிருக்கிறது" (மத். 25:41); அவன் "அக்கினிக்கடலில்" (இரண்டாம் மரணம் - முழுமையான, பூரணமான நித்திய அழிவுக்-குள்) தள்ளப்பட்டான்... இரவும் பகலும் சதா காலங்களிலும் வாதிக்கப்பட்டார்கள் (இங்கே "வாதிக்கப்பட்டார்கள்" என்று*

மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை "பசானிசோ" (basanizo). அதன் முதல் அர்த்தம் 'சோதிப்பது' என்பதாகும். ஏசா.14:16;66:24 -ஐ ஒப்பிட்டுப்பார்க்கும்போது, நீதிமான்கள் நித்தியத்திற்கும் சீர்திருத்த முடியாத துன்மார்க்கரின் செயல்முறைகளைக்'குறித்து சிந்தித்து', 'வெளியே போய்' 'பார்ப்பார்கள்', அதாவது அவர்களுடைய செயல்முறைகளைக்குறித்து மனதில் சிந்தித்து, சோதித்து, கூர்ந்து ஆராய்ந்து பார்ப்பார்கள் என்று தெளிவாகிறது. இந்த சோதனை அல்லது ஆராய்வின் விளைவாக, துன்மார்க்கர் நித்தியத்திற்கும் அழிக்கப்படுவது நியாயமான காரியம் என்று முடிவுக்கு வருவார்கள், ஏனெனில் பிரிக்கமுடியாத அளவிற்கு அவர்கள் தீமையோடு இணைந்திருப்பார்கள் (வெளி. 20:10). கிறிஸ்து "மரணத்திற்கு அதிகாரியான பிசாசானவனை" அழிப்பார் (எபி.2:14); "உன்னில் அநியாயம் கண்டுப்பிடிக்கப்பட்டது மட்டும் ...குறைவற்றவனாய்" (Perfect) "தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில்" இருந்த லூசிபர் (Lucifer – light bearer) என்கிற சாத்தான் முழுமையாக நித்தியத்திற்கும் நிர்மூலமாக்கப்படுவான் - "இனி ஒருபோதும் இருக்கமாட்டாய்" (ஏசா.14:12-20; எசே.28:11-19). சந்தேகமின்றி பொய்க்குப்பிதா அவனுடைய இறுதியான அழிவைக்குறிக்கும் தீர்க்கதரிசனங்களை வெறுப்பான். ஆகையால் அவன் வஞ்சிக்கும் வேலைகளைச்செய்கிறான்:

i.அவன் ஒரு தீமையான தத்துவமாக மட்டுமேயிருக்கிறான் என்று வாதாடி அவனுடைய ஆள்தத்துவத்தையே (Personality) நிராகரிக்கும்படி "கிறிஸ்டியன் சைன்டிஸ்ட்" [Christian Scientists] போன்ற சிலரை வஞ்சிக்கிறான்

ii.அக்கினிக்கடல் என்பது சுத்திகரித்து பாதுகாப்பதைக் குறிக்கிறது என்றும், இறுதியாக எல்லோரும் நித்திய ஜீவனைப்பெறும்படி ரட்சிக்கப்படுவார்கள் என்றும் நம்பும்படி "யூனிவர்ஸலிஸ்ட்ஸ்"

*(Universalists) போன்ற மற்றவர்களையும் வஞ்சிக்கிறான்*

*iii.தேவனுடைய இருத்தலையும், வேதாகமம் தேவனால் உந்தப்பட்டது என்பதையும், அது நம்பத்தக்கதாயிருக்கிறது என்பதையும் நிராகரிக்கும்படி இன்னும் சிலரை வஞ்சிக்கிறான்.*

***20.*** *இவ்வாறாக, இறுதியாக "அன்பாகவேயிருக்கிற" [1யோவா.4:8] ஜோதிகளின்பிதாவாகிய தேவனிடம் சுத்திகரிக்கப்பட்ட ஒரு பிரபஞ்சம் இருக்கும். துன்மார்க்கர் எல்லோரும் நிர்மூலமாக்கப்பட்டதினால், தீமை நித்தியத்திற்கும் செயலற்றதாய் இருக்கும் - "நியாயக்கேடு எல்லாம் தன் வாயை மூடும்" (சங்.107:42). "அப்பொழுது வானத்திலும் பூமியிலும் இருக்கிற சிருஷ்டிகள்யாவும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக" என்று சொல்லி தேவன் மற்றும் கிறிஸ்துவை நித்தியத்திற்கும் போற்றும் மகா துதியின் கீதத்தில் பங்குகொள்வார்கள் [வெளி. 5:13,14]*

**வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு; இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும், பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். யெஷுூஆ கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்.ஆகிலும், இந்த அறிவு எல்லாரிடத்திலும் இல்லை.** *1 கொரி 8:5-7*

## ஒன்றான மெய் தேவனுடைய நாமம் - யாவே

***ஆங்கில பழைய ஏற்பாட்டில் எங்கெல்லாம் “லார்ட்” (LORD) என்ற வார்த்தைக்கு, பெரிய வடிவு எழுத்துக்கள் (Capital letters) உபயோகிக்கப்பட்டிருக்கிறதோ, தமிழ் பழைய ஏற்பாட்டில் எங்கெல்லாம் “கர்த்தர்” என்ற வார்த்தைக்கு தடித்த அடர் நிற எழுத்துக்கள் (Bold letters) உபயோகிக்கப்பட்டிருக்கிறதோ, அங்கெல்லாம் எபிரெய மூல பாஷையில் நான்கு எழுத்துக்கள் (Tetragrammaton] உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. ஆங்கிலத்தில் அந்த நான்கு எழுத்துக்கள் “YHWH” [யஹவஹ - Y(ய) H(ஹ) W(வ) H (ஹ) ]ஆகும். அதை நாம் இப்பொழுது “யாவே”[Yahweh] என்று உச்சரிக்கிறோம். “யாவே” என்ற வடிவத்தில் அந்த வார்த்தை “அவர் இருக்கிறார்” [He is] என்ற அர்த்தத்தைக்கொண்டதாயிருக்கிறது. இந்த நாமம், தேவனுடைய “தம்மில்தாமே ஜீவனோடு இருத்தல்”, நித்தியத்துவம், சாவாமை, ஈடற்ற உச்சநிலை, பூரணத்துவம், பிறரை சாராது தனித்து இயங்கும் தன்மை ஆகியவைகளை வெளிப்படுத்துகிறது.***

## தேவனுடைய ஒரே பேறான குமாரனின் நாமம் -“யெஷுஆ”

***“யோஷுஆ” [Yoshua](அப்.7:45; எபி. 4:8), அல்லது “யெஷுஆ” [Yeshua]என்ற எபிரெய பெயருக்கான லத்தீன் வார்தை “இயேசு” [Iesous]ஆகும். “யாவே இரட்சிப்பாயிருக்கிறார்”, “யாவேயின் இரட்சிப்பு”, அல்லது “யாவே இரட்சிப்பார்” என்பதே “யெஷுஆ” என்ற வார்த்தையின்பொருளாகும். இந்த நாமமும், இம்மானுயேல் (தேவன் நம்மோடு இருக்கிறார்- மத்.1:23) என்ற நாமமும் நமது கர்த்தருடைய அலுவலின் வேலையைக்குறிக்கின்றன. மேலும் இரட்சிப்பு யாவேயுடையதென்றும், அவருடைய ஒரே பேறான குமாரனின் மூலம் அந்த இரட்சிப்பு வரும் என்றும் காண்பிக்கின்றன.***

***வேதாகம சத்தியத்தின் அடிப்படையில் கீழ்கண்ட தலைப்புகள் பற்றி மேலும் அறிய விரும்புகிறீர்களா?***

**பூமியில் தேவ ஆளுகை**

**இரண்டாம் வருகை**

**நரகம் என்றால் என்ன?**

**நியாயத்தீர்ப்பு நாள்**

**ராஜாவின் பெரும்பாதை**

**மரித்தோர் எங்கே?**

**மரித்தோரின் உயிர்தெழுதல்**

**மேலும் விவரங்களுக்கு தொடர்புகொள்ள**

| | |
|---|---|
| ***சேலம்*** | **:+91 99447 72503** |
| ***புதுச்சேரி*** | **:+91 94422 90098** |
| ***கோவை*** | **:+91 94422 15703** |
| ***சென்னை*** | **:+91 86959 81393** |
| ***திருச்சி*** | **:+91 85085 54771** |
| ***பெங்களூரு*** | **:+91 90361 45140** |

Published by : Millennial Bible Truth Movement